# உள்ளாட்சித்துறை அறிவிக்கை

----

## I

## மணப்பாறை நகராட்சி

(ந.க. எண். 1227/2018/அ1, நாள் : 9–8–2018)

### தொழில் வரி உயர்வு குறித்த அறிவிக்கை

தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 124–D உட்பிரிவு 13இன்படியும், தமிழ்நாடு அரசாணை (நிலை) எண்.11 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 12–1–1999இன்படியும், தொழில்வரி விகிதங்களை 5 ஆண்டுகளுக்கு ஒருமுறை சீராய்வு மேற்கொள்ள ஆணையிடப்பட்டுள்ளது. அதனடிப்படையில் மணப்பாறை நகர்மன்ற தீர்மானம் எண்.388, நாள் 23–7–2018இன்படி இந்நகராட்சியில் வசூல் செய்யப்பட்டு வரும் தொழில்வரி விகிதங்களை 25%க்கு குறையாமலும் 35%க்கு மிகாமலும் மற்றும் அரையாண்டிற்கு தொழில்வரி அதிகபட்சமாக ரூ.1250–க்கு மிகாமலும் உயர்வுசெய்து 2018–19 II-ம் அரையாண்டு முதல் நிர்ணயம் செய்ய தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதன்படி தற்பொழுது கீழ்க்கண்ட அட்டவணையின்படி அரையாண்டிற்கு தொழில்வரி வசூலிக்கப்பட்டு வருவதில் ஒவ்வொரு சராசரி அரையாண்டு வருமான நிலைகளில் தொழில்வரியினை கீழ்க்காணும் விகிதங்களில் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது என்ற விவரம் இதன்மூலம் அறிவிக்கப்படுகிறது.

| வ. எண். | சராசரி அரையாண்டு வருமானம் | தற்போது அமலில் உள்ள அரையாண்டிற்கான தொழில்வரி. | 35% உயர்வு செய்யப்பட்ட தொழில்வரி. | 1–10–2018க்குப் பின் நிர்ணயம் செய்யப்படும் அரையாண்டு தொழில்வரி. |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) (ரூபாய்) | (4) (ரூபாய்) | (5) (ரூபாய்) |
| 1. | ரூ. 21,000 வரை பெறுவோர் | இல்லை | இல்லை | இல்லை |
| 2. | ரூ. 21,001 முதல் 30,000 வரை | 132 | 46 | 178 |
| 3. | ரூ. 30,001 முதல் 45,000 வரை | 329 | 115 | 444 |
| 4. | ரூ. 45,001 முதல் 60,000 வரை | 659 | 231 | 890 |
| 5. | ரூ. 60,001 முதல் 75,000 வரை | 987 | 345 | 1250 |
| 6. | ரூ. 75,001 முதல் அதற்கு மேல் | 1250 | – | 1250 |

மேற்கண்ட தொழில்வரி கட்டண விகிதங்கள் 2018–19 இரண்டாம் அரையாண்டு முதல் நடைமுறைப்படுத்தப்படும்.

மணப்பாறை,
2018 ஆகஸ்ட் 9.

ப. மனோகரன்,
தனி அலுவலர் / ஆணையர் (பொ),
மணப்பாறை நகராட்சி.